**செய்தி வெளியீடு எண்: 419** **நாள்: 17.07.2012**

## பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு கே.ஏ. ஜெயபால், அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவுக்கிணங்க மீன்வளத்துறை அலுவலகத்தில் 17.07.2012 அன்று அனைத்து மீன்துறை அதிகாரிகளுடன் கடல் மற்றும் உள்நாட்டு மீன்வளத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலர் திரு ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., மீன்வளத்துறை இயக்குநர், திரு ச.முனியநாதன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த ஆய்வுக் கூட்டத்தில் மீனவ சமுதாயத்தின்முன்னேற்றத்திற்கு பயன்தரும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்திய ஆழ்கடல் சூரை மீன்பிடிப்பு திட்டம், மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவர் குடும்பம் ஒன்றிற்கு 4000 ரூபாய் சிறப்பு நிவாரணத் தொகையாக வழங்கும் திட்டம், மீன்பிடி தடைக் கால நிவாரணத் தொகையாக மீனவர் குடும்பம் ஒன்றிற்கு உயர்த்தி வழங்கப்பட்ட 2000 ரூபாய் வழங்கும் திட்டம் மற்றும் இதர சிறப்பு திட்டங்களின் செயல்பாடு குறித்தும், முன்னேற்றம் குறித்தும் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் தீவிர ஆய்வு செய்தார். தற்போதைய அரசு, 2011–ல் பொறுப்பேற்ற பின்னர் 130 கோடி ரூபாய் செலவில், அனுமதி வழங்கப்பட்ட சென்னை, பழையார், நாகூர், நாகப்பட்டினம் ஆகிய மீன்பிடி துறைமுகங்கள்/இறங்கு தளங்கள் ஆகியவற்றினை மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். அனைத்து திட்டங்களையும் குறிப்பிட்ட கால அளவிற்குள் மீனவர்களுக்கு நன்கு பயன்படும் வகையில் செயலாக்கம் செய்து முடித்திடவும் அறிவுரைகள் வழங்கினார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**